# திராவிடத்தால் வாழ்கிறோம்

1176

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

53

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

## கழகத் தலைவர் காப்பாற்றிய இராணி மேரி கல்லூரி!




ஓவியம் : ரவி பேலட்

2022-ஆம் ஆண்டு, சென்னை, இராணி மேரி கல்லூரியின் 104-வது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். அவரது உரையில், அந்தக் கல்லூரி இன்றும் இயங்கிக் கொண்டிருப்பதற்கான ஒரு போராட்ட வரலாற்றினைப் பகிர்ந்துகொண்டார். அந்த வரலாறு, அந்தக் கல்லூரி காப்பாற்றப் பட்டதற்கான வரலாறு. அந்தக் கல்லூரியைக் காப்பாற்றுவதற்காகத் தலைவர் ஒரு மாதம் சிறையில் அடைக்கப்பட்ட வரலாறு.

“என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத எத்தனையோ நிகழ்ச்சிகள் இருந்தாலும், இந்தக் கல்லூரிக்காகப் போராடிய மாணவிகளுக்குத் துணை நின்றதற்காக, அதை நினைத்துப் பார்க்கின்றபோது, இது ஒரு மறக்க முடியாத சம்பவமாக, என்னைப் பொறுத்தவரையில் அமைந்திருக்கிறது. என் வாழ்வில் அப்படிப்பட்ட ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்த இடம், இந்த இராணி மேரி கல்லூரி” என்று கழகத் தலைவர் நெகிழ்ந்து குறிப்பிட்ட அந்தப் போராட்டம் காரணமாகத்தான் இன்றும் அந்தக் கல்லூரி நூற்றாண்டுப் பழைமையுடன் இயங்கிக்கொண்டிருக்கிறது.

கல்லூரி வளாகத்தில் கழகத்தின் போராட்டமும், கல்லூரி வளாகத்துக்கு வெளியே களத்திலும், நீதிமன்றம் சட்டமன்றங்கள் வழி, கழகம் முன்னெடுத்த போராட்டங்கள் இன்றைக்கு நினைவூட்டுவது காலப்பொருத்தமாகும்.

### தமிழ்நாட்டின் முதல் மகளிர் கல்லூரி

இந்தியாவில் முதன்முதலாகத் தொடங்கப் பட்ட மூன்று மகளிர் கல்லூரிகளில், சென்னை இராணி மேரி கல்லூரியும் ஒன்று. தமிழ்நாட்டின் முதல் மகளிர் கல்லூரி. இந்த நூற்றாண்டுக் காலத்தில் இலட்சக்கணக்கான மாணவிகள் பட்டம் பெற காரணமாக இருந்த கல்லூரி. கல்வியை, அறிவை, ஆற்றலை, வேலைவாய்ப்பை, தன்னம்பிக்கையை, வாழ்க்கையை உருவாக்கித் தந்த பழம்பெருமை கொண்ட இந்தக் கல்லூரியை இடிப்பதற்கு ஒரு திட்டம் தீட்டினார் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா.

2003, ஜனவரி 31-ஆம் தேதி, சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சர் அம்மையார் ஓர் அதிர்ச்சிகரமான அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த அறிவிப்பு, சென்னை கண்ட உணர்ச்சி பூர்வமான போராட்டங்களில் ஒன்றாக மாறியது. இராணி மேரி கல்லூரியை இடித்து விட்டு, அந்த இடத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கான அந்தத் திட்டத்தினைத் தொடக்க நிலையிலேயே எதிர்த்தது கழகம்.

அறிவிப்பு வந்ததும், கல்லூரி வளாகத்திற்குள் மாணவிகள் ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். அங்கு படித்துக் கொண்டிருந்த மாணவிகள், முன்னாள் மாணவிகள், பேராசிரியர்கள், முன்னாள் பேராசிரியர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, அந்தப் போராட்டத்தைத் தொடங்கினர். அதனுடைய உச்சக்கட்டமாக, உண்ணாவிரதப் போராட்டம், மாணவிகள் உள்ளிருப்புப் போராட்டம் அறிவித்தனர்.

> தலைவர் கைது செய்யப்பட்டு இரவோடு இரவாக கடலூர் மத்திய சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஒரு மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

கல்லூரிக்கு விடுமுறை விட்ட அம்மையார் அரசு, அங்கு பணியாற்றிய பேராசிரியைகளையெல்லாம் வேறு ஊர்களுக்கு இடமாற்றம் செய்தது. மாணவிகள் அசராமல் போராட்டத்தை நடத்திய நிலையில், கல்லூரிக்குள் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது. மாணவிகள் கழிப்பறைகளைப் பயன்படுத்தக்கூட முடியாமல் பூட்டு போடப்பட்டது. எல்லாம் ஓரிரு நாட்களில் அடுத்தடுத்து நடந்த நிலையில், சட்டமன்றத்தில் கழகத்தின் சார்பில், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், சட்டமன்றம் முடித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பும் வழியில், இராணி மேரி கல்லூரியில் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாணவிகளைச் சந்தித்து ஆறுதல் சொல்லி, “உங்களுடைய போராட்டத்திற்கு, ‘திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஆதரவு தரும்’ என்ற செய்தியைச் சொல்லிவிட்டு வாருங்கள்” என்று இன்றைய கழகத் தலைவர், அன்றைய இளைஞர் அணிச் செயலாளருக்கு உத்தரவு போடுகிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

### கழகம் துணை நிற்கும்

அந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு, தலைவரும் கழக சட்டமன்ற உறுப்பினர்களும் கல்லூரி வளாகத்துக்கு வருகின்றனர். மூடப்பட்டிருந்த வாசல் கதவை காவலர்கள் திறந்துவிட்டு உள்ளே அனுமதிக்கின்றனர். தலைவரும் கழக சட்டமன்ற உறுப்பினர்களும் உள்ளே வந்து, போராட்டம் நடத்திக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மாணவியரைச் சந்தித்து, போராட்டத்துக்கு ஆதரவு அளித்து நம்பிக்கையூட்டினர்.

“நாங்கள் உங்களுக்கு எப்போதும் துணை நிற்போம், கலைஞர் அவர்கள் உங்களிடம் சொல்லிவிட்டு வரச் சொன்னார். நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். ஆனால், அமைதியாகப் போராடுங்கள்” என்று அவர் அளித்த நம்பிக்கை, மாணவியர்க்கு பெரும் பலத்தை, ஊக்கத்தை அளிக்கிறது. தலைவர் கல்லூரியில் இருந்து திரும்பும்போது, காவலர்கள் மூடியிருந்த கதவுகளைத் திறந்துவிடு கிறார்கள். இந்த நிகழ்வு பகல் 2.00 மணி முதல் 2.30 மணிக்குள் நடைபெற்றது.

இரவு 12 மணிக்கு வேளச்சேரியில் உள்ள தலைவரின் இல்லத்தைக் காவல் துறையின் பெரும் படை முற்றுகையிட்டது. இராணி மேரி கல்லூரியில் போராடிக்கொண்டிருக்கின்ற மாணவிகளுக்கு, வாசல் கதவினை உடைத்துக் கொண்டும், ஏறிக் குதித்தும் ஆதரவு தெரிவித்ததற்காகக் கைதுசெய்ய வந்துள்ளதாகக் காவல்துறை கூறியது. தலைவர் கைது செய்யப்பட்டு இரவோடு இரவாக கடலூர் மத்திய சிறைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, ஒரு மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் சிறையில் அடைக்கப்பட்ட அன்றிலிருந்து, போராட்டம் மாணவியர் கைகளில் இருந்து கழகத்தின் கைகளுக்கு வந்தது.

‘கடலோரங்களில் ரூ.5 கோடிக்கு மேலான மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டுவதைத் தடுக்கவும், பாரம்பரிய கட்டடங்களை இடிப்பதைத் தடுக்கும் வகையிலும், அப்போது ஒன்றிய சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்த கழகத்தின் பொருளாளர் டி.ஆர்.பாலு ஓர் உத்தரவைப் பிறப்பித்தார். இதனால் இராணி மேரி கல்லூரியை இடிப்பதில் சிக்கல் எழுந்தது. ஒன்றிய அரசின் உத்தரவை எதிர்த்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கில் இடை மனுதாரராகக் கழகம் இணைந்துகொண்டது.

இராணி மேரி கல்லூரியை இடிக்கக்கூடாது எனக் கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டங்கள், கழகத்தின் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவரைக் கைதுசெய்ததற்கு எதிராக வழக்குகள் எனப் போராட்டத்தினை முன்னின்று நடத்தத் தொடங்கினார் கலைஞர். நூற்றாண்டுப் பழைமையான அந்தக் கல்லூரியை, அம்மையாரின் கொடூர கரங்களில் இருந்து மீட்க, கலைஞர் எழுதிய அறிக்கைகள் அனலாகத் தகித்தன.

...தொடரும்

## திராவிட மாடல் ஆட்சிதான் தொடர வேண்டும்!

தி.மு.க. ஆட்சி ஏன் தொடர வேண்டுமென்று, சமூக செயற்பாட்டாளரான இனியன் ராமமூர்த்தி, தனது சமூக வலைதளப் பக்கங்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். அவரது பதிவில், ‘ஒவ்வொரு குடும்பக் கட்டமைப்பும் ஜாதியம் மற்றும் சடங்கு மற்றும் சம்பிரதாயங்களால் மட்டுமே, தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டமைப்புகளை மாற்றியமைத்து, சமத்துவம் மற்றும் சமூக நீதி போன்றவற்றை உறுதிசெய்யவே, இந்திய அரசியலமைப்புச் சட்டம் உள்ளது. ஆனால், அவை சரியான அளவில் அனைத்துத் தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

அதே நேரம் அவற்றைக் கொண்டுசேர்க்கவும், அதில் உள்ளவற்றை உள்வாங்கிக்கொள்ளவும், அதன்படி அனைவரும் சமம் என்னும் நிலையில், இந்தச் சமூகம் பயிற்சி பெற அவற்றைப் பள்ளிதோறும் அத்தனை குழந்தைகள் மத்தியிலும் கொண்டுசென்று சேர்க்க வேண்டியது, ஓர் அரசாங்கத்தின் கடமை. அந்தக் கடமையின் ஒரு மிகச் சிறிய புள்ளியொன்றைத் திராவிட மாடல் அரசாங்கம் தொட்டிருக்கிறது என்பதை, அதிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் அதன் அடிப்படையையும் மாற்றிடத் துடித்துக் கொண்டிருக்கும் சனாதனக் கோட்பாட்டுக் கூட்டம் மேலே அமர்ந்திருக்கும் இந்தக் காலத்தில், ஒவ்வொரு குழந்தையின் கரங்களிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை ஒவ்வொரு பாடப்புத்தகத்திலும் முதல் பக்கத்தில் அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

அதே போல, காலை - மாலை எனப் பள்ளிக்கூட நேரங்களில் ‘மாணவர்களுக்கு மட்டும்’ என்னும் பலகையுடன் அரசுப் பேருந்துகள் தமிழ்நாடு முழுவதும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதுவொரு மிகப் பெரிய முன்னெடுப்பு. அந்தப் பேருந்துகளில் முழுவதும் பள்ளிச்சீருடையில் உள்ள குழந்தைகள் மட்டுமே ஏற்றப்படுகிறார்கள். இதனால், அரக்கப்பரக்க அடைத்து வைப்பதுபோலும், படிக்கட்டில் தொங்கிக்கொண்டு போவதுபோன்ற செயல்கள் வெகுவாகக் குறைந்து இருக்கின்றன. இதன் பலன்கள் எதுவும் உடனடியாகத் தெரியப்போவதில்லை. மாறாக, ‘இப்படியெல்லாம் ஒரு திட்டம் தமிழ்நாட்டில் இருக்கிறது’ என அடுத்த 15 வருடங்கள் கழித்துப் பேசப்படும். இவை அனைத்தும் தொடரவும், மேற்கொண்டு அடுத்தடுத்த கட்டங்கள் பாய்ச்சலுடன் நகர வேண்டும் என்றால், கட்டாயம் ‘திராவிட மாடல் 2.O தொடர வேண்டும்’ என எழுதியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ஆர்.கரிகால் சோழன்



### ‘கழகமே குடும்பம், குடும்பமே கழகம்!’

1987-ஆம் ஆண்டு, என் தந்தை கழக முன்னோடி கோட்டூர் ராஜசேகரன் அவர்களின் மணவிழா முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. கழக முன்னோடிகள் மன்னையார், அன்பிலார், ஆற்காட்டார், கோ.சி.மணி, எல்.ஜி., வெற்றிகொண்டான் எனப் பலரும் கலந்துகொள்ள, கழகப் பொதுக்கூட்டம் போல நடைபெற்றுள்ளது. இந்தப் படத்தையும், திருமண அழைப்பிதழையும் பார்க்கிறபோதெல்லாம், குடும்பமே கழகம்; கழகமே குடும்பம் போல இருந்தது என்கிற நினைவுகளை விட்டுச்சென்றுள்ளார் என் தந்தை. அவரது வழியில், கழக உறுதியுடன் நிற்பதே அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாக இருக்கும்.

**- ஆர்.கரிகால் சோழன், மன்னார்குடி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சிறை சென்றாலும், தொடர்ந்து போராட்டம்!

1953-ஆம் ஆண்டு கல்லக்குடிப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களில் கலைஞர், முல்லை சக்தி, கஸ்தூரி, குமரவேல், குழந்தைவேல் என ஐந்து பேருக்கு ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இராம.சுப்பையா உள்ளிட்ட 31 பேருக்கு இரண்டு மாதம் கடுங்காவல் தண்டனை. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டும், மறியல் போராட்டம் தொடர்ந்தது. சி.பி.சிற்றரசு தலைமையில், 100 நாட்களுக்கு மேல் கல்லக்குடியில் போராட்டம் நடைபெற்றது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900